2010 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விவசாயிகள் பெரும்பாலும் கோவை மற்றும் பல மாவட்டங்களிலெல்லாம் தென்னையை வளர்த்து, தேங்காய் உற்பத்தி செய்வது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் மற்றும் திரு. என்.ஆர். ரெங்கராஜன் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, இதுவரை தமிழக அரசின் சார்பில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் எப்பொழுதும் செய்வதில்லை. தேங்காயாகவும் அரசின் சார்பில் கொள்முதல் செய்வதில்லை. கொப்பரைத் தேங்காய் ஒரு கிலோ என்ன விலை என்று மத்திய அரசாங்கம் நிர்ணயம் செய்து அதை வாங்குவதற்கு "NAFED" மூலம் உத்தரவிட்டு அவர்கள் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கொள்முதல் செய்ய, அந்த விலைக்கு அனுமதி வழங்குவார்கள். அந்த அடிப்படையிலேதான், கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது.*

முற்பகல் 10–25

ஆகவே, கொப்பரைத் தேங்காய் கிலோவுக்கு இப்பொழுது இருக்கின்ற விலையைவிட கூடுதலாகத் தரவேண்டுமென்று இந்த மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கின்றோம். அந்த அனுமதி கிடைத்தால் அந்த விலையில் 'NAFED' மூலம் கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்றவற்றையெல்லாம் நாளைக்குப் பார்ப்போம். இன்றைக்கு நேரம் இல்லை.*

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில*

சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கைதிகளை அடையாளங்காணுதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு கைதிகளை அடையாளங்காணுதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு கைதிகளை அடையாளங்காணுதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.